# அமைச்சர் க.பொன்முடி வீட்டில் அமலாக்கத்துறை சோதனை!

# பா.ஜ.க. மிரட்டல்! எதிர்க்கட்சித் தலைவர்கள் கண்டனம்!

### எதிர்க்கட்சிகளைக் கண்டு பா.ஜ.க.தான் அச்சம் அடைந்துள்ளது!

## அமலாக்கத்துறை சோதனையை கண்டு அச்சப்படும் கட்சி அல்ல தி.மு.க.!

### அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கண்டனம்!

புதுடெல்லி, ஜூலை 18-

அமலாக்கத்துறை சோதனையை கண்டு அச்சப்படும் கட்சி அல்ல தி.மு.க. என்று அமைச்சர் பொன்முடி வீட்டில் சோதனை நடத்துவதற்கு அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கண்டனம் தெரிவித்துள்ளார்.



சென்னை சைதாப்பேட்டையில் அமைச்சர் பொன்முடி வீட்டில் காலை 7 மணி முதல் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். செம்மண் குவாரி தொடர்பாக 2012ல் தொடரப்பட்ட வழக்கில் 11 ஆண்டுக்கு பிறகு தற்போது சோதனை நடத்தப்பட்டு வருகிறது. விழுப்புரம் சண்முகபுரத்தில் உள்ள அமைச்சர் பொன்முடி வீட்டில் அமலாக்கத்துறையினர் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் அமைச்சர் பொன்முடி வீட்டில் அமலாக்கத்துறை சோதனை நடத்துவதற்கு அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

அமலாக்கத்துறை சோதனையை கண்டு அச்சப்படும் கட்சி அல்ல தி.மு.க. எதிர்க்கட்சிகளின் ஆலோசனை கூட்டத்தில் இருந்து கவனத்தை திசை திருப்பவே அமலாக்கத்துறை சோதனையில் ஈடுபட்டுள்ளது. பா.ஜ.க.வை ஆதரிப்பதாக கூறப்படும் கட்சிகளின் பெயர்களை வெளியிட தயாரா? அவை பதிவு கூட செய்யப்படாத கட்சிகள். எங்களோடு உள்ள மக்கள் தொடர்ந்து எங்களோடுதான் இருக்கிறார்கள்.

**கட்சிகளை பிளவுபடுத்தி பலத்தை காட்ட முயற்சி!**

மோடியே மிக பலம் பொருந்தியவர் என்றால் 30 கட்சிகளுக்கு அவர் அழைப்பு விடுப்பது ஏன் என்றும் கார்கே கேள்வி எழுப்பியுள்ளார். பா.ஜ.க. அச்சமடைந்துள்ளதால் தான் பல கட்சிகளை பிளவுபடுத்தி பலத்தை காட்ட முயற்சிக்கிறதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சிகளின் நடவடிக்கையை கண்டு பா.ஜ.க. அச்சம் அடைந்துள்ளது எனவும் கூறினார்.

### அமலாக்கத் துறை மூலம்

## எதிர்க்கட்சிகளை அச்சுறுத்துகிறது பா.ஜ.க.

### டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் கண்டனம்!

புதுடெல்லி, ஜூலை 18-

அமைச்சர் பொன்முடி வீட்டில் அமலாக்கத்துறை சோதனை நடத்துவதற்கு டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.



சென்னை சைதாப்பேட்டையில் அமைச்சர் பொன்முடி வீட்டில் காலை 7 மணி முதல் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். செம்மண் குவாரி தொடர்பாக 2012ல் தொடரப்பட்ட வழக்கில் 11 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது சோதனை நடத்தப்பட்டு வருகிறது. விழுப்புரம் சண்முகபுரத்தில் உள்ள அமைச்சர் பொன்முடி வீட்டில் அமலாக்கத்துறையினர் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

அமைச்சர் பொன்முடி வீட்டில் அமலாக்கத்துறை சோதனை நடத்துவதற்கு பல்வேறு கட்சி தலைவர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அமைச்சர் பொன்முடி வீட்டில் நடத்தப்படும் சோதனைக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அமலாக்கத்துறை மூலம் கட்சிகளை உடைக்கவும் எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தவும் பா.ஜ.க. முயற்சி செய்கிறது. பா.ஜ.க. கூட்டணியில் உள்ள கட்சித் தலைவர்களை மட்டும் அமலாக்கத்துறை விட்டுவிட்டது. இந்தியா போன்ற மிகப்பெரிய நாட்டில் அமலாக்கத்துறை மூலம் எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தவோ, கட்டுப்படுத்தவோ முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

## பா.ஜ.க. ஒரு மூழ்கும் கப்பல்;- அமலாக்கத்துறை அதன் இளைஞர் அணி!

### மார்க்சிஸ்ட் கே.பாலகிருஷ்ணன் கடும் விமர்சனம்!

சென்னை, ஜூலை 18-

அமைச்சர் பொன்முடி வீடுகளில் அமலாக்கத்துறை சோதனை நடைபெறும் நிலையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே. பாலகிருஷ்ணன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

அமலாக்கத்துறை பா.ஜ.க.வின் இளைஞர் அணி போல செயல்படுகிறது. ஒரு வழக்கில் 11 ஆண்டுகளுக்கு பின் திடீரென சோதனை மேற்கொள்வது கண்டனத்திற்குரியது. இந்த சோதனைகள் பா.ஜ.க. மீது மேலும் வெறுப்பை ஏற்படுத்தும். எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையை சீர்குலைக்கும் வகையில் இதுபோன்ற சோதனைகள் நடைபெறுகின்றன. எதிர்க்கட்சிகள் கூட்டத்தை இருட்டடிப்பு செய்யும் வகையில் சோதனை நடைபெறுகின்றன.



பா.ஜ.க. ஒரு மூழ்கும் கப்பல், அதை எது செய்தாலும் சரி என்று செய்ய முடியாது. ஒன்றிய அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டு இல்லையா? அதன் மீது ஏன் நடவடிக்கைகள் இல்லை. பழைய வழக்கில் பா.ஜ.க. ஆதாயம் தேடுவதை எதிர்க்கிறோம். தமிழகத்தில் பா.ஜ.க. நுழைய முடியாது, தி.மு.க.வை உடைக்க முடியாது, அதனால்தான் அமைச்சர்களை குறி வைக்கின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

### அமலாக்கத்துறை

## பா.ஜ.க.வின் ஒரு அரசியல் பிரிவாக செயல்படுகிறது!

### தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி கண்டனம்!

சென்னை, ஜூலை 18-

அமைச்சர் பொன்முடி வீட்டில் அமலாக்கத்துறை சோதனைக்கு தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி வீட்டில் அமலாக்கத்துறை சோதனைக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ். அழகிரி கண்டனம் தெரிவித்துள்ளார்.

அமலாக்கத்துறை மூலம் மிரட்டி அடிமைப்படுத்தலாம் என ஒன்றிய பா.ஜ.க. அரசு நினைக்கிறது. ஒன்றிய அமைச்சர்கள் மீதும் ஊழல் குற்றச்சாட்டுகள் உள்ளன; என்றாவது அவர்கள் வீட்டில் அமலாக்கத்துறை சோதனை நடைபெறுகிறதா?



அமலாக்கத்துறை சோதனையால் மக்களிடையே எதிர்க்கட்சியினருக்கு செல்வாக்கு அதிகமாகும். பா.ஜ.க.வின் ஒரு அரசியல் பிரிவாக அமலாக்கத்துறை செயல்படுவதாக மக்கள் கருதுகிறார்கள். பா.ஜ.க.வுக்கு அரசியல் செய்ய தெரியவில்லை; நேருக்கு நேர் எதிர்கொள்ள பா.ஜ.க.வுக்கு திராணி இல்லை எனவும் கே.எஸ்.அழகிரி கூறினார்.

## அமலாக்கத்துறையை கைப்பாவையாக மாற்றியுள்ளது!

### மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா கண்டனம்!

சென்னை, ஜூலை 18-

அமைச்சர் பொன்முடி வீட்டில் அமலாக்கத்துறை சோதனை நடத்துவதற்கு மனித நேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா கண்டனம் தெரிவித்துள்ளார்.



பா.ஜ.க. ஆட்சி செய்யாத மாநிலங்களில் அமலாக்கத்துறை மூலம் மிரட்டி ஆட்சியாளர்களை பணிய வைக்க ஒன்றிய அரசு முயற்சி செய்கிறது. உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடிக்கு அமலாக்கத் துறை மூலமாக நெருக்கடி தர பா.ஜ.க. முயற்சி செய்கிறது. அமலாக்கத் துறையை தொடர்ச்சியாக தன் கைப்பாவையாக மாற்றி இருக்கும் பா.ஜ.க.வின் செயல் கண்டிக்கத்தக்கது எனவும் அவர் கூறினார்.

### விருதுநகர் – சாத்தூரில்

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கும் விடுதிகள் ஆய்வு!

### அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் மேற்கொண்டார்!

விருதுநகர், ஜூலை 18-

விருதுநகர் மற்றும் சாத்தூரில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கும் விடுதிகளை மேம்படுத்துவது குறித்து, மாவட்ட வருவாய் அலுவலர் ரவிகுமார் தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் மற்றும் சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆ.ரகுராமன் ஆகியோர் முன்னிலையில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று (16.07.2023) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு துறையையும் மேம்படுத்தும் நோக்கில், சிறப்பு திட்டங்கள் மூலம் நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்தி வருகிறார்கள்.

அதன்படி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் கீழ் உள்ள தங்கும் விடுதிகளை மேம்படுத்துவது குறித்து தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இன்று விருதுநகர் மற்றும் சாத்தூரில் உள்ள தமிழ்நாடு ஹோட்டல் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே தமிழகம் சுற்றுலாத்துறையில் தமிழ்நாடு முன்னணி இடத்தில் உள்ளது. இங்கே புராதன கோயில்கள் உள்ளதால் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. சுற்றுலாத் துறையை மேம்படுத்த அரசு சுமார் 100 கோடி ஒதுக்கியுள்ளது. கைவிடப்பட்ட 13 தமிழ்நாடு உணவகங்களை மறுசீரமைக்க ஆய்வு மேற்கொண்டு சாத்தியக்கூறுகள் உள்ள சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா பயணிகளுக்கு புதிய படகு சவாரிகளை உருவாக்கவும் அரசு முயற்சி மேற்கொண்டும், சுற்றுலா தலங்களில் பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், கழிப்பறை வசதிகளை மேம்படுத்த அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா துறையின் கீழ் உள்ள கைவிடப்பட்ட 300 இடங்களை மேம்படுத்த புனரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, சாத்தூர் கோட்டாட்சியர் சிவக்குமார், விருதுநகர் நகர்மன்றத் தலைவர் மாதவன் உட்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தோவாளை வடக்கு ஒன்றியம், அழகியபாண்டியபுரம் பேரூர் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் அழகியபாண்டியபுரம், வி.ஆர்.மினி மஹாலில் வைத்து பேரூர்க் கழகச் செயலாளர் அருள்தாஸ் தலைமையிலும், ஒன்றியக் கழகச் செயலாளர் பிராங்கிளின் முன்னிலையிலும் நடைபெற்றது. கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார். கூட்டத்தில் மாவட்டக் கழக பொருளாளர் கேட்சன், மாவட்ட துணைச் செயலாளர் திருமதி.கரோலின் ஆலிவர்தாஸ், புதுப்பாண்டி பேரூர்க் கழகச் செயலாளர் ஆலிவர்தாஸ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சதீஷ் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டம்

## மக்களின் கவனத்தை திசை திருப்பும் பா.ஜ.க.வின் மலிவான அரசியல்!

### அமலாக்கத்துறை சோதனைக்கு – இந்திய கம்யூனிஸ்ட் இரா.முத்தரசன் கண்டனம்!

சென்னை, ஜூலை 18-

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்றிய அரசின் அதிகாரத்தை பா.ஜ.க. அரசியல் ஆதாயம் தேடும் மலிவான செயலுக்கு பயன்படுத்தி வருகிறது. குறிப்பாக அமலாக்கத்துறை சட்ட விதிகள், விசாரணை முறைகள் என அனைத்து வழிகளிலும் அத்துமீறி, எதிர்க்கட்சித் தலைவர்கள் மீது தாக்குதல் நடத்தும் ஆயுதமாக பயன்படுத்தப்படுகின்றது.

அண்மையில் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி மீது பணப்பரிமாற்ற குற்றச்சாட்டில் சோதனை என்ற பெயரில் கடுமையாக நெருக்கடியும், நிர்ப்பந்தமும் கொடுத்ததன் காரணமாக அவர் உயிருக்கு ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்டு, நீதிமன்றக் காவலில் சிகிச்சை பெற்று வருகிறார்.



தமிழ்நாடு அரசின் இலாகா இல்லாத அமைச்சராக இருந்து வரும் வி.செந்தில் பாலாஜியை அரசியல் அமைப்புச் சட்டம் முதலமைச்சருக்கு வழங்கியுள்ள விருப்புரிமை அதிகாரத்திற்கு எதிராக ஆளுநர் செயல்பட்டு அமைச்சர் பொறுப்பிலிருந்து வி.செந்தில் பாலாஜியை நீக்கம் செய்வதாக அறிவித்தார். பின்னர் உடனடியாக அதனை நிறுத்தி வைப்பதாக அறிவித்த கேலி கூத்து செயலால் பா.ஜ.க.வின் சாயம் வெளுத்து போனது.

தற்போது உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி மற்றும் அவரது குடும்பத்தினர் மீது அமலாக்கத்துறை சோதனை தாக்குதல் நடத்தி வருகிறது.

முந்தைய ஆட்சியால் சொத்துக் குவிப்பு மற்றும் நில அபகரிப்பு குற்றம் சாட்டப்பட்ட வழக்குகளில் இருந்து அமைச்சர் க.பொன்முடியும் அவரது குடும்பத்தினரும் அண்மையில் தான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் மீதான வழக்குகளை சட்டரீதியாக சந்திக்க அவர்கள் ஒரு போதும் தயக்கம் காட்டியதில்லை. தப்பித்துக் கொள்ள குறுக்கு வழி தேடியதும் இல்லை. இந்த நிலையில் அமலாக்கத் துறை கூறும் குற்றச்சாட்டையும் எதிர் கொண்டு முறியடிப்பார்கள் என்பது உறுதியாகும்.

ஆனால், அமலாக்கத்துறையின் தலைவர் பொறுப்பில் மூன்றாவது முறையாக பதவி நீடிப்புப் பெற்று, பா.ஜ.க.வின் அரசியல் முகவராக செயல்பட்டு வரும் தலைவரின் "தகுதியை" நாடு நன்கு அறிந்துள்ளது. அண்மையில் மகாராஷ்டிராவில் அஜித்பவாரை வளைத்து பிடித்தது போல் தமிழ் நாட்டிலும் ஏதாவது கிடைக்குமா என நாவில் நீர் சொட்ட பா.ஜ.க. அலைந்து திரிகிறது.

ஆர்.எஸ்.எஸ். வழி நடத்தும் பா.ஜ.க.வை ஒன்றிய அரசின் அதிகாரத்தில் இருந்து வெளியேற்ற, வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து வருகின்றன. இன்றும், நாளையும் (17, 18, ஜூலை 2023) பெங்களூருவில் கூடும் எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்ப அமலாக்கத்துறையை பா.ஜ.க. ஒன்றிய அரசு பயன்படுத்தி இருக்கும் மலிவான செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### பா.திருமாவளவன் தலைமை! பி.சுந்தரபாண்டியன் முன்னிலை! கடலூர் கிழக்கு மாவட்டம்,

## கம்மாபுரம் வடக்கு, மத்திய ஒன்றியக் கழகம் சார்பில் கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகள்!

### எம்.ஆர்.கே.பி.கதிரவன் வழங்கினார்! துரை.கி.சரவணன் பங்கேற்பு!

கடலூர், ஜூலை 18 -

கடலூர் கிழக்கு மாவட்டம், கம்மாபுரம் வடக்கு, மத்திய ஒன்றிய கழகம் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு,

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழிக்காட்டுதலின்படியும், 15072023, சனிக்கிழமை, காலை 8.30 மணி முதல் ஊ.கொளப்பாக்கம், ஊ.அகரம், பொன்னாலகரம், ஊத்தங்கால், கூனங்குறிச்சி, ஊமங்கலம், வடக்கு வெள்ளூர், பழையநெய்வேலி, மேல்பாதி, கெங்கைகொண்டான், பெரியாக்குறிச்சி, கீழ்பாதி, வடக்கு சேப்ளாந்த்தம், தெற்குசேப்ளாந்த்தம், உய்யக்கொண்டராவி, கோட்டகம், வீணங்கேணி உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளில், கழக கொடியேற்றி, நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி, வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பா.திருமாவளவன் தலைமையில், மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் பி.சுந்தரபாண்டியன் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்டக் கழகப் பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் துரை.கி.சரவணன் ஆகியோர் கலந்து கொண்டு கழக கொடியினை ஏற்றி, கல்வெட்டினை திறந்து வைத்து, இனிப்புகள் வழங்கியும், விவசாயிகளுக்கு மரக்கன்றுகள், நலிவுற்ற தொழிலாளர்களுக்கு சலவை பெட்டிகள், ஏழை எளியோருக்கு அன்னதானம், 10,000 பெண்கள், ஆண்களுக்கு புடவைகள், வேட்டிகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள், மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினர்.

இந்நிகழ்வில் நிகழ்வுகளில் மாவட்ட துணை செயலாளர் அ.ஞானமுத்த்து, கம்மாபுரம் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.ஆர்.ராயர், திருமுட்டம் வடக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.செந்தில்குமார் கழக பொதுக்குழு உறுப்பினர் ம.பொ.புகழேந்தி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ.எம்.மதியழகன், வடக்கு ஒன்றிய அவைத் தலைவர் ஜோதி, ஒன்றிய கழக துணை செயலாளர்கள் தி.தமிழ்ச்செல்வன், கேஸ்.ஜி.கணேசன், ஒன்றிய பொருளாளர் கே.கதிர்வேல், மாவட்ட பிரதிநிதிகள் எம்.சி.வி.மோகன், என்.விஜயகுமார், கே.அரங்கநாதன், தகவல் தொழில்நுட்ப அணி ஆர்.மார்க், மத்திய ஒன்றிய அவைத் தலைவர் ஜி.பட்டுகுமார், ஒன்றிய துணை செயலாளர்கள் ஏ.இருதயசாமி, பாக்கியலட்சுமி, அருட்பெருஞ்ஜோதி, ஒன்றிய பொருளாளர் ஜி.குருசாமி, மாவட்ட பிரதிகள் ஆபேல்,பழனியப்பன், அந்தோணிசாமி, இளைஞரணி அமைப்பாளர் தம்பிதுரை, துணை அமைப்பாளர் ஆர்.சரவணன், அசோக்குமார்,

கங்கைகொண்டான் பேரூராட்சி தலைவர் ஃபரீதா அப்பாஸ்,பேரூர் கழக செயலாளர் பக்தவச்சலம்,துணை செயலாளர் அப்பாஸ், துணைத் தலைவர் பிலிப்ஸ், இளைஞரணி அமைப்பாளர் சிலம்பொலி,துணைஅமைப்பாளர்கள் கணேசண்,ராமகிருஷ்ணன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் வேல்முருகன், பெனாசீர் அகிலாண்டேஸ்வரி, கார்த்திகேயன், தீன்முகமது, வீரராகவன், விஜயராகவன், இராம. அருள்ஜோதி, கங்கைகொண்டான், ஆறுமுகம், தெய்வ. ஆசைதம்பி, சரவணன், கே.சுரேஷ், செந்தில்குமார், கம்மாபுரம் கலை, சிக்கந்தர், மதிமுருகன், ஏழுமலை, பாலகிருஷ்ணன், சிவா, முத்து, பாரி, மாறன், அராபத், அப்பு, பிரகாஷ், கீழ்பாதி மணி உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர், ஊராட்சி, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.